## பள்ளிக் கல்வித் துறை –விழுப்புரம் மாவட்டம்

## தமிழ் ஒப்படைப்பு - டிசம்பர் 2021

**வகுப்பு:12.** **மதிப்பெண்:50**

**I அ) எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.** **5×2=10**

1.புக்கில், தன்மனை குறிப்பு வரைக .

2.நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது ?

3.எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

4.மணந்தகம் என்றால் என்ன?

5.சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை ?

6.மறக்கக்கூடாதது, மறக்கக்கூடியதுஎவற்றை ?

7.சினத்தை ஏன் காக்க வேண்டும்?

**ஆ)எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.** **5×2=10**

8.**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்பு கொள்ளவேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

9.**கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடரமைக்க.**

1) தானே 2) கொண்டு

10.**கலைச் சொல்லாக்கம் தருக.**

1) Lobby. 2) Mini Meals

11.**பிரித்துப் புணர்ச்சிவிதி கூறுக .**

1)செல்லிடத்து 2) அருங்கானகம்

12.**பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.**

1) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்

2) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

13.**இலக்கணக் குறிப்பு கூறுக.**

1) தாழ்கடல் 2) மறத்தல்

14)**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

1) தந்தனன் 2) பொலிந்தான்

II. **எவையேனும் ஐந்தனக்கு விடை தருக.** **5×3=15**

15.வருபவர் எவராயினும் நன்றி செலுத்து – இடம் சுட்டி பொருள் விளக்குக.

16.பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் -விளக்குக.

17.குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

18.நிரல்நிரை அணியைச் சான்றுடன் விளக்குக.

19.இல்வாழ்க்கைச் சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர்வழி விளக்குக.

20 சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் – குறளில் இடம்பெறும் அணியைச் சுட்டிக்காட்டி விளக்குக.

21.சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.

III. **எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடை எழுதுக .** **2×5=10**

22.பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப் பகுதிவழி நிறுவுக. (அல்லது)

குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விவரி.

23.செய் நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக . (அல்லது)

"உரிமைத்தாகம்" கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.

IV. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×5=5**

24. துன்புஉளதுஎனின் (அல்லது) குகனோடும் ஐவர் ஆனேம் - எனத் துவங்கும் கம்பராமாயணப் பாடல்.